**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் 29.09.2023ஆம் நாளன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்**

**பொருள் எண்.01**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி துப்புரவு ஆய்வாளர்(பொ) அவர்களின் 12.07.2023ஆம் தேதிய குறிப்பின்படி, புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக (ODF+) சான்றிதழ் பெறும் பொருட்டு நகராட்சிக்கு சொந்தமான பொதுக்கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொண்டு தருமாறு கோரியுள்ளார். எனவே மேற்கண்ட கழிப்பிடங்களை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1138/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக (ODF+) சான்றிதழ் பெறும் பொருட்டும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதி 2023-2024ன் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் : 148**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.02**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஒப்பந்ததாரர் மற்றும் குத்தகைதாரர் ஆகியோர்களிடம் பிடித்தம் செய்த சரக்கு மற்றும் சேவை வரித்தொகை மற்றும் வருமான வரித்தொகை ஆகியவற்றை E-Filing செய்தமைக்கு PM ASSOCIATES, SATHYAMANGALAM என்ற நிறுவனத்தாருக்கு 2022-2023ஆம் ஆண்டிற்கு ரூ.29,000/- வழங்கவும் 2023-2024ஆம் நிதியாண்டிற்கு தோராய செலவினம் ரூ.30,000/-யும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1132/2023/பி1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 149**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.03**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொறியியல் பிரிவு கனம் ஈப்பு வாகனம் எண்.TN 36 BU 1874 ஆனது 10350கி.மீ ஓடியுள்ளதால் அதனை பழுது நீக்கப்பணிகள் (Cai Industeries Pvt Ltd, Coimbatore) நிறுவனத்தில் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1236/2023/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 150**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.04</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடைகள் , இரண்டாம் மூன்றாண்டு குத்தகை 01.07.2023 முடிவடைய உள்ளதால் மேலும் மூன்றாம் மூன்றாண்டு 01.07.2023 முதல் 30.06.2026 வரை மேலும் புதுப்பிக்க மற்றும் வாடகை 15% வரியை உயர்த்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | உரிமையாளர் பெயர் | கடை விவரம் | குத்தகைக் காலம் | வரி உயர்வு |
|---|---|---|---|---|
| 1 | திரு.ரங்கநாதன் | ஊராட்சி ஒன்றியம் கடை எண்.1 | மூன்றாம் மூன்றாண்டு 01.07.2023 முதல் 30.06.2026 | 15% |
| 2 | திரு.சையது நதீம் | ஊராட்சி ஒன்றியம் கடை எண்.2 | | |
| 3 | திரு.கே,கண்ணன் | ஊராட்சி ஒன்றியம் கடை எண்.3 | | |
| 4 | ஆர்.சிவா | ஜவகர் மெயின் ரோடு கடை எண்.21 | மூன்றாம் மூன்றாண்டு 01.10.2023 முதல் 30.09.2026 வரை | 15% |

**(ந.க.எண். 1135/2023/அ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 151**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.05</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட கெம்பண்ணா ஓதிமலை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆசியா ஹாக்கி கோப்பை–2023, கோப்பை அறிமுக விழா 27.07.2023 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் மற்றும் ஈரோடு மாவட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவில் பள்ளி மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி, குடிநீர் மற்றும் சாமியானா ஆகிய வசதிகள் செய்து கொடுத்தமைக்கு செலவுத் தொகை ரூ.40,500/– ஒப்பந்ததாரர்

திருமதி.ந.புனிதவதி அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். /2023/அ2)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 152**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.06</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.15 வாரச்சந்தை பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள 14 தற்காலிக மாட்டிறைச்சி கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர ஏதுவாக இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் மாத வாடகையாக ஒரு கடைக்கு ரூ.1,649/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பிரதி வாரம் வியாழன் மற்றும் ஞாயிற்று கிழமை ஆகிய இரண்டு நாட்களுக்கு கடை வைத்து நடத்திக் கொள்ளவும், மேலும், மேற்கண்ட 14 தற்காலிக மாட்டிறைச்சி கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். /2023/அ2)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 153**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.07</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் குடிநீர் நிதி 2023–2024ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.03, 04, 07, 13, 14, 16 மற்றும் 17 ஆகிய வார்டுகளில் உப்புதண்ணீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் பணிக்காக 13.09.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.03, 04, 07, 13, 14, 16 மற்றும் 17 ஆகிய வார்டுகளில் உப்புதண்ணீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் பணி | 8.00 இலட்சம் | திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை | 0.15% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.சி.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 1.78% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட 0.15% குறைவாக வழங்கியுள்ள திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1094/2023/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 154**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.08</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்தல் பணிக்காக 13.09.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்தல் பணி | 4.80 இலட்சம் | திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை | 0.12% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.சி.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 1.63% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட 0.12% குறைவாக வழங்கியுள்ள திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1138/2023/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 155**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.09</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு

கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.V.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர்மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்றுநோய் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.10.2023 முதல் 31.12.2023 வரையுள்ள மூன்று மாத காலத்திற்கு திரு.V.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 156**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.10</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக பத்து நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணிக்கு அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.06.2023 முதல் 30.09.2023 வரையுள்ள மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 30.09.2023 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் 01.10.2023 முதல் 31.12.2023 வரையுள்ள மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.387/2017/இ1)**

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 157**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.11</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், அண்ணாநகர் நீருந்து நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணற்றின் மின்மோட்டார்கள், நகராட்சி கட்டிடங்களில் உள்ள மின்சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள

மின்சாதனப்பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள் சரிசெய்யவும், அக்டோபர் 2023 முதல் மார்ச் 2024 வரை உள்ள 6 மாத காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுதொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 518/2023/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை 2023–2024 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 158**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.12**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், அக்டோபர் 2023 முதல் மார்ச் 2024 வரை உள்ள 6 மாதகாலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.519/2023/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை 2023–2024 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 159**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.13**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள் மற்றும் விநியோககுழாய்கள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், அக்டோபர் 2023 முதல் மார்ச் 2024 வரை உள்ள 6 மாதகாலத்திற்கு பராமரிப்புபணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.520/2023/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை 2023–2024 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 160**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.14**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடை முதலாம் மூன்றாண்டு குத்தகை 30.08.2023 முடிவடைய உள்ளதால் மேலும் இரண்டாம் மூன்றாண்டு 01.09.2023 முதல் 31.08.2026 வரை மேலும் புதுப்பிக்க

மற்றும் வாடகை 15% வரியை உயர்த்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | உரிமையாளர் பெயர் | கடை விவரம் | குத்தகைக் காலம் | வரி உயர்வு |
|---|---|---|---|---|
| 1 | திரு.வெங்கிட சாமி | ஜவகர் மெயின் ரோடு கடை எண்.22 | இரண்டாம் மூன்றாண்டு 01.09.2023 முதல் 31.08.2026 வரை | 15% |

**(ந.க.எண். 1135/2023/அ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 161**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>நகர்மன்ற தலைவரால் கொண்டுவரப்படும் தீர்மானம்</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி விளம்பர பலகைகள் வைக்கப்படுவதாக தொடர் செய்திகள் மற்றும் புகார்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. கடந்த காலங்களில் அனுமதியின்றி வைக்கப்படும் விளம்பர பலகைகளால் உயிர் சேதமும், தேவையற்ற சமூக பிரச்சனைகளும் ஏற்பட்ட காரணத்தினால், மாண்பமை உயர் நீதிமன்ற ஆணையின் அடிப்படையிலும், " நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை – தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள், 2023 – [அரசாணை (நிலை) எண். 45, நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் (தேர்தல்) துறை, 12.04.2023 – அத்தியாயம் X – ஹோர்டிங்ஸ், பதாகைகள் மற்றும் பலகைகள் – பகுதி II "–ன் படியும், தமிழ்நாடு நகராட்சி மற்றும் மாநகராட்சி சட்டத்திற்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு நகராட்சியிடம் முறையான அனுமதி பெற்றால் மட்டுமே இனிவரும் காலங்களில் விளம்பர பலகைகளை வைக்க அனுமதி வழங்கப்படும்.

இச்சட்டத்திற்கு முரணாக வைக்கப்படும் விளம்பர பலகைகள் அனைத்தும் அகற்றப்படுவது மட்டுமின்றி, சட்டத்தை மீறி விளம்பரப் பலகைகள் வைக்கும் உரிமைதாரர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும், சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பொதுமக்களுக்கு தெரியபடுத்திட மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண் : 162**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**(ஓம்)திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

**//உண்மைநகல் உத்தரவுப்படி//**

**ஆணையாளர்(கூ.மு.பொ)**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**